**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**C.C. No. 155/2022 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஐஸ்வர்யா | தந்தை/கணவர் பெயர்: கிருஷ்ணன் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of26.03.2026

---

**(எதிரிகள் ஆஜர்)**

**26.03.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் எனது கணவரின் நண்பர்கள் ஆவார் . சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி , மாதம் ஞாபமில்லை ஒருநாள் எனது கணவர் எனது வீட்டின் அருகேயுள்ள பழைய இரும்பு கடை முன்பு இருந்த போது அங்கே கூட்டமாக இருந்ததார்கள் . கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் எனது கணவர் கீழே விழுந்துவிட்டார் . அவருக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவம் குறித்து சிங்கம்புணரி காவல் நிலையம் சென்று சொன்ன போது அங்கே கையொப்பம் மட்டும் வாங்கி கொண்டார்கள் . என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. **( அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** புகாரில் உள்ள விவரங்களை நான் கூறவில்லை. போலீஸ்சார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

2.நான் தற்போது எதிகளுடன் சமதானம் ஆகி நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . **(அந்த சமதான மனு அ.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. நான் புகாரிலும், போலீஸ்சார் விசாரணையிலும் கடந்த 17.09.2021ம் தேதி மாலை 5.00 மணிக்கு எனது கணவர் மணப்பட்டி பாளையா என்பவரது பழைய இரும்பு கடை அருகே இருந்தபோது அங்குவந்த ஆஜர் எதிரிகள் எனது கணவரை பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி , 1வது எதிரி பீர் பாட்டிலை வைத்து எனது கணவரை முதுகில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார்

என்றும், 2 வது எதிரி மற்றொரு பீர் பாட்டிலை உடைத்து எனது கணவரின் தலையில் குத்தினார். காயத்தை ஏற்படுத்தி எதிரிகள் இருவரும் சேர்ந்து எனது கணவரைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை.